பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 15 வெள்ளிக்கிழமை (30-07-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 244

# கிளாலிக் கடலில் பயணிகள் படைகளால் கோரக் கொலை!

## காயமடைந்தோர்

நேற்றுக் காலை கிளாலிக் கடல் சம்பவத்தில் காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் பொது மக்களின் விவரம் வருமாறு:-

★ கதிர்காமநாதன் ஜெயந்தி (32 வயது) உரும்பராய் வடக்கு.

★ சபாநாதன் மகாலட்சுமி (53 வயது) — யாழ். நல்லூர் செட்டித்தெரு. இவரின் கணவர் இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

★ கதிரமலை பூமணி (50 வயது) — திருமலையிலிருந்து இடம்பெயர்ந்து அச்சுவேலியில் வசிப்பவர். இவரின் மகள் இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

★ பொன்னையா கதிர்காமு (78 வயது) — கோப்பாய்.

★ மார்க்கண்டு மாணிக்கசிங்கம் (45 வயது) — யாழ். நீராவியடி.

★ கணேந்திரநாதன் (51 வயது) — மல்லாகம்.

## பொருள்கள் ஏற்றி வந்த மற்றும் 2 படகுகள் மூழ்கின?

நேற்று கிளாலிக் கடற் பரப்பில் ஸ்ரீலங்கா படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் பயணிகளின் இரு படகுகள் தவிர ஆடு, மாடு ஏற்றிக்கொண்டு வந்த ஒரு படகும், உணவுப் பொருள்களுடன் வந்த ஒரு படகும் கடலில் மூழ்கியதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

எனினும் இத்தகவலை நேற்றிரவு வரை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

## உண்ணாவிரதம் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

சிங்கள யுத்தக் கைதிகள் 33 பேரும் நேற்று திட்டமிட்டபடி மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

நேற்று முற்பகல் 10.50 மணியளவில் இவ் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது.

தாம் நேற்றிலிருந்து இன்னும் ஐந்து தினங்கள் வரை நீர் அருந்தி உண்ணாவிரதத்தை மேற்கொள்ளப் போவதாகவும் அதற்குள் ஸ்ரீலங்கா அரசு தம்மை விடுவிப்பதற்கான நடவடிக்கையை எடுக்காது போனால் நீர் அருந்தாமலே சாகும்வரையிலான உண்ணாவிரதத்தைத் தொடரப் போவதாகவும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 30

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக் கிழமையும் வழமையான நேரத்துக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## 8க்கும் அதிக பொதுமக்கள் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 30

கிளாலிக் கடற் பிராந்தியத்தில் நேற்று அதிகாலை 4 மணியளவில் ஸ்ரீலங்கா கடற்படையினர் தமிழ் பயணிகள் மீது நடத்திய கோரக் கொலை வெறியாட்டத்தில் எட்டுக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினர். ஆறு பேர் வரை காயமடைந்தனர். பயணிகள் உடைமைகள் நாசமாகின.

நேற்று அதிகாலை சுமார் 2-45 மணியளவில் ஆலங்கேணி நல்லூர் கரையிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டு கிளாலிக் கரையை நோக்கி வந்து கொண்டிருந்த இரு படகுகளே படையினரின் கொலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாம் பயணிகள் சுடாதீர் என கத்தியும் படையினர் சுட்டனர்

### கணவரைப் பறி கொடுத்த பெண் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 30

நாம் பயணம் செய்த படகு நடுக்கடலில் வந்து கொண்டிருந்தபோது இயந்திரம் பழுதடைந்துவிட்டது. அதனால் படகினை நங்கூரம் பாய்ச்சி படகோட்டி இயந்திரத்தைத் திருத்திக் கொண்டிருந்தார்.

அப்போது எமது படகின் மீது தூரத்தே இருந்து ''போக்கஸ்'' வெளிச்சம் பாய்ச்சப்பட்டது தெரிந்தது.

சில நிமிட நேரத்தில் கடற்படைப் படகுகள் எமது படகைச் சுற்றி வளைத்தன. பின்னர் அவை எமது படகை நெருங்கி வந்தன. அப்போது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பெற்றோல் பந்தம் எறிந்து படகுக்குத் தீமூட்ட முயன்றனர்

### மற்றொருவர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 30

எமது படகுக்கு அருகே வந்த படையினர் பயணிகளை நோக்கிச் சரமாரியாகச் சுட்ட பின்னர் படகிற்குள் குதித்தனர்.

குதித்தவர்கள் எமது படகின் பாய் தொடுக்கப்பட்ட கம்பங்களை அடித்து முறித்தனர். பாயை கிழித்துக் கடலில் வீசினர்.

எமது படகிலிருந்த இளைஞன் ஒருவனை பலவந்தமாக இழுத்துத் தமது படகில் ஏற்றினர்.

அதன் பின்னர் தமது படகிற்குள் ஏறி துணி ஒன்றைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து சடலங்கள் மட்டும் அடையாளம் காணப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 30

நேற்று அதிகாலை கிளாலிக் கடலில் ஸ்ரீலங்காப் படையினரால் படுகொலையுண்ட எட்டுப் பொதுமக்களில், ஐவர் அடையாளம் காணப்பட்டனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ சண்முகம் சபாநாதன் (63 வயது) — யாழ். நல்லூர் செட்டித்தெரு.

இவரின் மனைவி இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மண்கிண்டி முகாம் தகர்ப்பு விசாரிக்க தனி நீதிமன்றம்

### இராணுவத் தளபதி சிசில் நேற்று நியமித்தார்

மணலாற்றுப் பகுதியில் மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது கடந்த ஞாயிறு அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென விசாரணை நீதி மன்றம் ஒன்றை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன நேற்று நியமித்தார்.

இராணுவத்தின் பிரதம தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா இந்த நீதிமன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

பிரிகேடியர்கள் நந்தா டி சில்வா, கிறிபீரிஸ், கேர்ணல் சிசிர விஜயதுங்கா ஆகியோர் இம்மன்றத்தின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

மண்கிண்டி மலையில் இடம் பெற்றது போன்ற சம்பவங்கள்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்குப் பெரிய தோல்வி!

### கட்டைக்காட்டை விட கூடுதல் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, ஜூலை 30

மணலாறுப் பகுதியிலுள்ள மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது கடந்த ஞாயிறு அதிகாலை விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல் இராணுவத்துக்குப் பெரும் தோல்வி ஆகும். அத்துடன் விடுதலைப் புலிகளினால் இராணுவத்தின் மீது நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதலும் இதுவாகும்.

கொழும்பில் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

கட்டைக்காடு இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போதும் ஐந்து கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை புலிகள் கைப்பற்றி இருந்தனர். மண்கிண்டிமலை இரா[illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சடலங்களை அடையாளம் காண மக்கள் முண்டியடிப்பு

கிளாலியில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் நேற்று யாழ். போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த சமயம் சடலங்களை அடையாளம் காண்பதற்காக பல நூற்றுக்கணக்கான பொது மக்கள் முண்டியடித்துக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளாலி ஊடாகப் புறப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் கொழும்பில் இருந்து உறவினர்களின் வருகைக்காக காத்திருந்தோர் ஆகியோரே யாழ். போதனா வைத்திய சாலைப் பகுதியில் நேற்று பெரும் அளவில் காணப்பட்டனர். (இ-162)

## தள்ளாடியில் 3 படையினர் பலி

மன்னார் தள்ளாடி ரயில் பாலத்துக்கு அருகில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற மோதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டதாக கூட்டுப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 30

எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ (உயர்தரப்) பரீட்சைக்கான முதல் 12 நாட்களுக்குரிய வினாத்தாள்கள் நேற்று வந்து சேர்ந்தன.

யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கொழும்பில் இருந்து விமானம் மூலம் இவற்றை எடுத்து வந்துள்ளார். (இ-9-173-3)

## நில அளவைத் திணைக்கள போட்டிப் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 30

நில அளவைத் திணைக்களத்தில் நடுநிலை தொழில் நுட்ப வியலாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சை நாளை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை இன்று கல்வித் திணைக்களத்தில் பெறலாம் என்றும் — பெறத் தவறியவர்கள் நாளை பரீட்சை மண்டபத்தில் பெறலாம் என்றும் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவர்கள் பரீட்சைக்கு தோற்ற விரும்பினால், பரீட்சைக்கான கட்டணத்தை யாழ். நில அளவைத் திணைக்களத்தில் செலுத்தி, முறையான விண்ணப்பப் பத்திரத்தை இன்று யாழ். கல்வி அலுவலகத்தில் சமர்ப்பித்து அனுமதி அட்டையைப் பெற்று, நாளை பரீட்சைக்கு தோற்ற முடியும் என்றும் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கான வினாப் பத்திரங்கள் நேற்று வந்து சேர்ந்தன. (இ-3)

## சப்ரகமுவா முதலமைச்சர்

கொழும்பு, ஜூலை 30

சப்ரகமுவா மாகாணத்தின் புதிய முதலமைச்சராக திரு. எச். ஆர். ஜெயதிலக பொடிகாமே நேற்று பதவியேற்றார்.

முதலமைச்சராக பணிபுரிந்து வந்த திரு. புஞ்சிநிலாமே காலமானதைத் தொடர்ந்து இப் புதிய நியமனம் செய்யப்பட்டுள்ளது. (இ-எ)

## நாளை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை நடைபெறும்.

நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் மாலை 3-30மணிக்கு ஆரம்பமாகும் இம் மலர் வெளியீட்டுவிழா மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும். (க-17)

### மணிகிண்டி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் ஏற்படாது தடுப்பதற்கான சிபார்சுகளைத் தெரிவிக்கும்படி இவ்விசாரணை நீதிமன்றத்தை இராணுவத் தளபதி கேட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட இந்த அதிரடித் தாக்குதலில் 70 படையினர் வரை கொல்லப்பட்டதும் ஏராளமான ஆயுதங்கள் அள்ளப்பட்டதும் தெரிந்தவையே. (இ-எ)


# சர்வதேச கூட்டுறவுதின விழா - 1993

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்
காலம்: 1993 07 31 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி

பாடசாலை மாணவர்களிடையேயும், கூட்டுறவுச் சங்கங்களிடையேயும் கோட்ட மாவட்ட மட்டங்களில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கப்படும்.

மாவட்ட மட்டத்தில் பரிசு பெற்ற மாணவர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்களின் நிகழ்வுகளும், கூட்டுறவுச் சங்கங்களின் நாடகம், குழுப்பாடல் கிராமிய நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்:

— யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை

குறிப்பு:- மேற்படி விழாவில் கூட்டுறவுச் சங்கங்கள், அனைத்து கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக, அன்றைய தினம் விடுமுறை வழங்கி அவர்களுக்கும், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் போக்குவரத்து வசதிகளினை அளித்து அனைவரும் விழாவில் கலந்து விழா சிறப்புற நடைபெற ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

[சி/5538]



## தசாக கிரகயக்ஞ அழைப்பு

நிகழும் ஸ்ரீமுக வருஷ ஆடி மாதம் 7 ஆம் நாள் (22-7-93 வியாழக்கிழமை சிவபதமடைந்த எனது சகோதரி (அக்கா)

**மூ. தாட்சாயணி அம்மா (அக்கா)**

அவர்களது அந்திமக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

ஆடி 16 தசாகம் 31-7 93 சனிக்கிழமை காலை 9.30 மணி

ஆடி 19 கிரகயக்ஞம் 3-8-93 செவ்வாய்க் கிழமை

மேற்படி கிரியைகளில் பங்குபற்றும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

சு இரத்தின ஐயர்
(அழகொல்லைப் பிள்ளையார் கோவில்)

தற்போதைய முகவரி;-
கும்பிழாவளைப் பிள்ளையார் கோவில் வீதி,
அளவெட்டி வடக்கு. (26731)



# A/L - 94

தூய, பிரயோக கணிதம்
ஆசிரியர்
**திரு. கிருஷ்ணர்**
ஆரம்பம்
**01 - 08 - 1993**
(சனி / ஞாயிறு பி. ப 4 — 6 மணி)

## யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(சி / 5537)



# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் சபாநாதன்

நல்லூர் செட்டித்தெருவை பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் சபாநாதன் அகால மரணமாகிவிட்டார்.

இவர் முன்னாள் ஓவசியர் சண்முகத்தின் சிரேஷ்ட் புதல்வரும், மகாலெட்சுமியின் அன்புக் கணவரும், மைதிலியின் அன்புத் தந்தையும், இராமநாதன், யோகநாதன், அருந்ததி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்;

இறுதிக்கிரியைகள் இன்று 30-07-1993 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ச. இராமநாதன்
(சகோதரர்)

80, செட்டித்தெரு,
நல்லூர். (26734)

## ஏரம்பமூர்த்தி அசோகன்

ஏரம்பமூர்த்தி அசோகன் 28 07 1993 இல் அகால மரணம் அடைந்தார்.

இவர் பன்னாலை காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி திருமதி கௌரிதேவி ஏரம்பமூர்த்தி ஆகியோரின் அன்பு மகனும், நளமலரின் அன்புக் கணவனும், ஹங்காசுதன், ஹரிகாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இரஞ்சன் (Milco நாரகன்பிட்டிய), வசந்தன் (ஆஸ்திரேலியா), வாசுகி ஆகியோரின் சகோதரனும், ஜெயராணியின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தற்போதுவதியும் தாவடி இல்லத்தில் 30-07-1993 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கௌரிதேவி
ஏரம்பமூர்த்தி

நித்தியானந்தபதி
தாவடிச் சந்தி,
தாவடி. [சி/5539]

## திருமதி ஐயனி மோகனச்சந்திரன்

திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட திரு. மோகனச்சந்திரனின் அன்பு மனைவி ஐயனி கனடாவில் 24-07-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற யோகநாதன் (Air Ceylon), சாந்தாதேவி (சாந்தி) ஆகியோரின் அன்பு மகளும், திரு. திருமதி குருநாதபிள்ளை (கனடா) ஆகியோரின் மருமகளும் அருளினியின் சகோதரியும், காலஞ்சென்ற திரு. திருமதி அருளம்பலம் (ஆசிரியர்), புஷ்பவதி ஆகியோரின் பேர்த்தியும், பகீரதனின் (கனடா) மருமகளும், சுபத்திரா, பிறேமளா (பிரான்ஸ்), ஹேமா, சுந்தரி [ரஷ்யா], பாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்), பாலசுந்திரா, குணபாலன் (புதிய தாரகை புடவை நிலையம்) ஆகியோரின் பெறாமகளும், ஜெயமயூறன், மிர்துளா, விதூசன், குருபரன் (பிரான்ஸ்), கிரிதரன் (பிரான்ஸ்), வித்தியாகரன், லக்சுமி, லக்சுமிகரன், ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
ம. குணபாலன்

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (26735)



எங்ஙனம் உமை மறப்போம்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மனிதனாய்! 25 — 10 — 1974

மாவீரனாய், 30 — 07 — 1991

## வீரவேங்கை ராஜீவ்
(குமாரசாமி ஜெயக்குமார்)
(7ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

புங்குடுதீவின் புகழ் காத்த மைந்தனே
சிங்கள வெறியரின் சினம் அடக்கவென்று
வெங்கள வீரனாய் வீறுடன் சென்றாயே
நீங்காத வீரனாய் மண்ணில் மறைந்ததும் - நீ
இங்கு இரண்டாண்டுகள் ஆனதையா!
உங்கள் தளராத துணிவையும் தமிழீழக்
கனவையும் எங்ஙனம் நாம் மறப்போம்.

: குடும்பத்தினர்.

ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம். (26730)



# BECON
## கல்வி நிறுவனம்

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பொருளியல்
S. வரதராஜன்
B. A. (Hons)

## A/L - 94

பொருளியல் I
மீட்டல்

பொருளியல் II
பாடத்திட்டம்,
வரவு-செலவுத் திட்டம்

ஆரம்பம்:
**1—8—1993**
ஞாயிறு 11-00

## A/L - 95

உற்பத்தி-
இயல்தகவு வளையி

ஆரம்பம்:
1—8—1993
ஞாயிறு 1-00

(சி-5634)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார, போக்குவரத்து தடை நீக்கப்;

# அரசை நிர்ப்பந்திக்கும் படி இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாவட்ட மக்களின் கஷ்டங்களை நீக்கும் வகையில் பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும்; போக்குவரத்தை மேற்கொள்ள சட்டரீதியான பாதை ஒன்றைத் திறக்க வேண்டும்; இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்திக்குமாறு கொழும்பில் இயங்கும் சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களையும், ஜேர்மன் தூதுவரையும் நேரில் சந்தித்து மேற்கண்ட கோரிக்கையை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் விடுத்துள்ளனர்.

கொழும்பில் தற்சமயம் தங்கியிருக்கும் இணையத்தின் பிரதிநிதிகள் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

போரூப், கெயர், யு. எஸ். எயிட்ஸ், குவாக்கர் சமாதானக் குழு, சர்வோதயம், யுனிசெவ் போன்ற தொண்டர் நிறுவனங்களையும்—

கொழும்பில் உள்ள ஜேர்மன் குடியரசு தூதுவர், புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள், அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பேர்னாண்டோ ஆகியோரையும் சந்தித்து இணையப் பிரதிநிதிகள் பேசியுள்ளனர்.

இணையத்தின் சார்பில் எல். ஆர். முத்தையா, எம். தம்பித்துரை, கே. ஜீவகதாஸ், பி. பாலகிருஷ்ணன் ஆகியோர் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

(த-3)

## விவசாயக் கடன்

வடமராட்சி, ஜூலை 30

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்க அங்கத்தவர்களான விவசாயிகளுக்கு விவசாயக் கடன்களை வழங்கவுள்ளது.

விவசாயக் கடன்களை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் சங்கத்தால் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன.

(த-173)

## கூட்டுறவு தினவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் சர்வதேச கூட்டுறவு தினவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(க-162)

எம். பிக்களின்

# நாடாளுமன்ற பேச்சுக்கள்; பிரசுரிப்பதில் கட்டுப்பாடு!

கொழும்பு, ஜூலை 30

நாடாளுமன்றத்தில் எம். பிக்கள் நிகழ்த்தும் பேச்சுக்களை அப்படியே பத்திரிகைகள் வெளியிடக்கூடாது என்றும் —

அப்பேச்சுகள் நாடாளுமன்ற ஹன்சார்டில் பதியப்பட்டிருப்பது போன்றே வெளியிடப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்றச் சிறப்புரிமைக் குழு ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் இரு எம். பிக்கள் 'பச்சை'யாக பேசி மோதிக் கொண்டதை, பத்திரிகை ஒன்று அப்படியே சொல்லுக்கு சொல்லாகப் பிரசுரித்தது என்றும் —

அது எம். பிக்களின் உரிமைகளை மீறுவதாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அடுத்து அது பற்றி விசாரிக்க இச்சிறப்புரிமைக்குழு அமைக்கப்பட்டது என்றும் —

விசாரணையின் பின்னர் அக்குழு இப்போது தான் தனது முடிவை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நாடாளுமன்றத்தில் நிகழ்த்தப்படும் பேச்சை தாம் கேட்டபடி பிரசுரிக்க முடியாத நிலை பத்திரிகையாளருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## நினைவாலயத் திறப்பு நிகழ்வு நாளை

ஆனையிறவு ஆகாய, கடல், வெளி சமரில் வீரச்சாவடைந்த விடுதலைப் புலி வீரர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளும் நினைவாலயத் திறப்பு நிகழ்வும் நாளை சனி மாலை 5 மணிக்கு கண்டி வீதி, கொடிகாமத்தில் அமைந்துள்ள நினைவாலயத்தில் நடைபெறும்.

நினைவாலய பூங்கா திறந்து வைத்தல், ஈகைச் சுடர் ஏற்றல், தேசியக் கொடி ஏற்றல், நினைவாலயம் திறந்து வைத்தல், உருவப் படங்களுக்கு மாலை சூட்டுதல், பெற்றோர் மலரிடுதல் ஆகியவை நடைபெற்ற இரவு 7-30 மணிக்கு நினைவுக் கூட்டம் ஆரம்பமாகும்.

(த)

## சிவதலங்களைத் திறக்க பிரார்த்தனையில் ஈடுபடுக

### இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள்

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், வாரிவனேஸ்வரம் மற்றும் மூடப்பட்டிருக்கும் சிவதலங்களை மீளத் திறக்க பிரார்த்தனை முதலிய நடவடிக்கைகளில் ஈடுபடும்படி இந்து இளைஞர் பேரவையின் அண்மைக்கால வெளியீடு ஒன்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிவசிந்தனையுடன் ஈழத்து சிவாலயங்கள் மீது பாடப்பட்டுள்ள திருமுறைகள், திருப்புகழ், திருக்கேதீஸ்வரப் பதிகம், திருக்கோணமலைப் பதிகம், கதிர்காமத் திருப்புகழ் ஆகியவற்றை மனனம் செய்து தினசரி வழிபாட்டிலும் வெள்ளிக்கிழமை வழிபாட்டிலும் இணைத்துக் கொள்ளும்படி இந்து சமயிகளை இவ்வெளியீடு கேட்டுக்கொள்கிறது.

அதேவேளையில் இந்து இளைஞர் பேரவை ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில், பொருளாதாரத் தடைகளை நீக்க இனரீதியான மோதலை நீக்கும்படியும் தமிழர் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படியும், சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்யும்படியும் வேண்டியுள்ளது.

(க-30)


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**பழைய மாணவர் சங்கம்**

வழங்கும்

**முழுநிலா நாள் அறிவியல் அரங்கு**

01-08-1993 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

3-30 — 4-30 மணி

''சமகால உலக விவகாரங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம்''

திரு. சமாதிலிங்கம் சத்தியசீலன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

4 30 — 5 30 மணி

''தலைமைத்துவமும் அதனை வளர்த்துக் கொள்ளலும்''

திரு. கனகசபை சிவானந்தமூர்த்தி
(சிரேஷ்ட விரிவுரையாளர், மெய்யியல்துறை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்,
(செயலர்).

(சி-5534)



வெளிவந்துவிட்டது!

**அறிவுக் களஞ்சியம் - 14**

ரூபா 3,000/- பரிசுக்கான சிறப்புப் பொது அறிவுப் போட்டி வினாக்களும், போட்டி நறுக்கும் இந்த இதழிலும் வெளிவந்துள்ளன.

★ தென்மராட்சிப் பகுதியிலுள்ள வாசகர்களும் விற்பனையாளர்களும் இந்த இதழ் தொடக்கம் பின்வரும் முகவரியிலும் பிரதிகளைப் பெறலாம்.

சிவம் மெடிக்கல்ஸ்,
கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-5624)



**Personal New Science Centre**

Elilakam Front Lane, Jaffna

**94 A/L**

★ 1 வருட பாட அலகு ரீதியான மீட்டல்.

★ 1 வருட Theory Classes

ஆரம்பம்:

**31-07-1993** சனி

CHE: திரு. செல்வா
PHY: திரு. ரவீந்திரநாதன்
BOT: திரு. பாலா
ZOO: திரு. ஈஸ்வரதாசன்
Pure / App: திரு. குணசிங்கம்

நேர அட்டவணை நிறுவனத்தில்

(சி/5532)


## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணகம்: 07 — 09 — 1960

விண்ணகம்: 09 — 08 — 1992

### திருமதி சகுந்தலாதேவி சிவகுமார்

திதி: 30 - 07 - 1993

ஆங்கிலமும் அருந்தமிழும் ஆய்ந்து கற்றாய்!
அணிகலனாய் நாற்குணமும் அமையப் பெற்றாய்!
வேய்ங்குழலின் இனியசுவை இதழிற் கொண்டே
வேலவனை நாள்தோறும் வழுத்தி நின்றாய்!
நீங்காத நினைவலைகள் எம்மைச் சாட
நீமறைந்து ஆண்டொன்று ஆகு தம்மா
தேங்கமழ்பூங் கொன்றைபணிந் தாடுங் கூத்தன்
திருப்பாதக் கமலமதில் திகழ்வாய் நாளும்

உமது பிரிவுத் துயரால் பெருநோயுறும்:
அன்புத் துணைவன், அப்பா, அம்மா, சகோதரி, மாமா, மாமி, மைத்துனர்கள், மைத்துனிகள், உடன் பிறவாத சகோதர, சகோதரிகள், பெறாமக்கள்.

9/2, கச்சேரிகிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(26624)

## பிறந்த நாள் நினைவலைகள்



செல்வி

### சாகித்தியா திருநந்தகுமார்

மலர்வு: 30 — 07 — 1991

உதிர்வு: 21 — 11 — 1992

தாளரிச் சதங்கை ஆர்பத் தவழ்ந்ததுவும்...
அம்புலியை வா! வா! என்று அழைத்ததுவும்...
மெல்ல அடியெடுத்து தளர்நடையில் உலவியதும்...
என்றும் எம் உள்ளத்தில் பசுமையாக இருக்குதம்மா!

தினமும் நின் வரவிற்காய் தியானித்திருக்கின்றோம்.

அப்பா, அம்மா,
உன் உரு அறியாத் தங்கை.

''இராணி மாளிகை''
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

(சி-5633)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda CD - 70 கிளச் மொடல் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: வே. அருண், இல.10, செம்மணி வீதி, முத்திரை சந்தையடி, நல்லூர்.

(26720)

### தேவை

¼ அங்குலம் இரும்புக்கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளப்படும். துண்டுக் கம்பிகளாயின் 2½ அடிக்கு மேல் இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு: சக்திப் பகுதி, த. பொ. மே. கழகம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி.

(சி-5535)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

கந்தர்மடம் பகுதியில் காட்போட் (Card Board) பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் இல. 37/22, முதலாம் ஒழுங்கை பிறவுண் வீதி, கந்தர்மடம் என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும்:

(26729)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம் S. K. சாமி- நெல்லியடி, மளிகை குசாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்;

(6366)

### ஆண்டு - 4 வகுப்பு

1994 ஆகஸ்ட் புலமைப்பரிசில் மாணவருக்கு (ஆண்டு-4) அடிப்படையில் இருந்து வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இணைய விரும்புவோர் விண்ணப்பிக்கவும். அனுமதிப் பரீட்சை 31-07-93 பிற்பகல் 3 மணி. ஆரம்பம் 01-08-1993 எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(26700)

ஆண்டு 4இற்கு புலமைப்பரிசில் (1994)பரீட்சைக்கு அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படவுள்ளது. ஆரம்பம்: 31-07-93 சனி முற்பகல் 8-30 மணி. மாதாந்தம் இரண்டு பரீட்சைகள். அடுத்த பரீட்சை 7-8-93 சனி முற்பகல் 8-00, முற்பகல் 11-00. பதிவு செய்யவும் புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26727)

### தவறிவிட்டது

நன்னித்தம்பி உருத்திரன் ஆகிய நான் சுன்னாகம் மத்திய சந்தை அருகாமையில் உள்ள வீதியூடாக மல்லாகம் செல்லும் வழியில் இல: 641041344V தேசிய அடையாள அட்டை அடங்கிய சிறு கைப்பை தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்: சிவலிங்கம் சைக்கிள் வேக்ஸ், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கவும். (6612)

### ஆண்டு - 5 பரீட்சை

எம்மால் வாரந்தோறும் நடத்தப்படும் புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை எதிர்வரும் 31 - 7 - 93 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெற விரும்புவோர் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26725)

### ஆண்டு - 4 பரீட்சை

ஒவ்வொரு சனிக்கிழமையும் நடத்தப்படும் புலமைப் பரிசில் (1994) பயிற்சிப் பரீட்சைத் தொடரின் மூன்றாவது பரீட்சை 31 - 07 - 1993 பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெற விரும்புவோர் பெற்றுக் கொள்ளலாம். எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(26724)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உரிய விடை உடனே கிடைக்கும். தினமும் காலை 8-30 — 12-30, பி.ப. 3-00 — 6-00. த. சிவானந்தன் பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு.

(26704)

## பாராட்டுவிழா

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நாதஸ்வர கலைஞர் திரு. தி. சத்தியநாதன் அவர்களைக் கௌரவிக்கும் பாராட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நடைபெறும்.

## விக்னா கல்வி நிறுவனம்

பிரத்தியேக வகுப்பு

**94**

அலகு ரீதியான வினா-விடை மீட்டல்

கணக்கியல்

ஆரம்பம்:

01-08-1993

2.00 — 4.00

S.K. பிரபாகரன்

(சி-5521)

## விக்னா கல்விநிறுவனம்

**94**

அலகு ரீதியான வினா - விடை மீட்டல்

ஆரம்பம்:

**01 - 08 - 1993**

9-00மணி

பொருளியல்— திரு. கலாகரன் 12 - 00 — 1 - 30

வர்த்தகம்— திரு. தேவா 10 - 00 — 11 - 00

கணக்கியல்— திரு. S. K. பிரபாகரன் 2 - 00 — 4 - 00

அளவையியல்— திரு. விக்கி 11 - 00 — 12 - 00

தமிழ்— திரு. குழந்தை 10 - 00 — 11 - 00

இந்துநாகரிகம் - சமயம்— திரு. காரைசுந்தரம்பிள்ளை 12 - 00 — 1 - 00

புவியியல்— திரு. குணராசா 9 - 00 — 10 - 00

அரசியல்— திரு. ஜெயகாந்தன் 9 - 00 — 10 - 00

வரலாறு— திரு. சிறீதரன் 1 - 00 — 2 - 00

(சி/5525)

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

THE JAFFNA EDUCATION CENTRE

(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்)

6 — 10 வருடம் வரையும் எல்லாப் பாடங்களும்

**O/L, A/L**

Spoken English

Short - Hand Typing இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

**புதிய பிரிவு: 31-07 1993 இல் ஆரம்பமாகின்றது.**

(6383) — நிர்வாகி.

## BECON

## கல்வி நிறுவனம்

STANLEY ROAD, JAFFNA.

**94 A/L**

விஞ்ஞான துரித மீட்டல் வகுப்புகள்

(பயிற்சி பரீட்சையுடன் கூடிய அலகு ரீதியான மீட்டல்)

சனி - ஞாயிறு

| | | |
|---|---|---|
| 10-00 — 11-00, 3-00 — 4-00 | விலங்கியல் | திரு. கெங்காதரன் |
| 11-00 — 12-00, 2-00 — 3-00 | தாவரவியல் | திரு. செல்வநேசன் |
| 12-00 — 1-00 | இரசாயனம் | திரு. தில்லை |
| 1-00 — 2-00 | பௌதிகம் | திரு. வர்ணம் |
| 10-00 — 12-00 | தூய/பிரயோக கணிதம் | திரு. கிருஷ்ணா |

**வினா - விடை நேர விவரம்:**

பௌதிகம் இரசாயனம் — செவ்வாய் 3-00 — 4-00

தாவரவியல் விலங்கியல் — செவ்வாய் 4-00 — 5-00

தூய/பிரயோக கணிதம் — வியாழன் 3-00 — 4-00

**ஆரம்பம்: 01 - 08 - 1993**

ஞாயிறு காலை 10.00

(சி-5605)

## NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

**94 A/L**

துரித மீட்டல் வினா-விடை வகுப்புகள்

சனி, ஞாயிறு வகுப்புகள்:

பிரிவு - I

| | | |
|---|---|---|
| 8-00 — 9-00 | Physics | திரு. கணேசன் |
| 9-00 — 10 00 | Botany | திரு. குணசிலன் |
| 10-00 — 11 00 | Zoology | திரு. தம்பிராஜா |
| 11-00 — 12 00 | Chemistry | திரு. சண் |
| 12 00 — 2-00 | Pure App. Maths | திரு. வெக்டர் |

பிரிவு - II

| | | |
|---|---|---|
| 1-00 — 2-00 | Zoology | திரு. சிறீகரன் |
| 2-00 — 3-00 | Botany | திரு குணசிலன் |
| 3-00 — 4-00 | Physics | திரு. சோதிலிங்கம் |
| 4-00 — 5 00 | Chemistry | திரு. மணியம் |
| 4-00 — 6-00 | Pure. App. Maths | திரு. குணசிங்கம் |

**ஆரம்பம்: 01–08–1993** ஞாயிறு 8 மணி

(சி-5628)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 01 — 02 — 1911

மறைவு: 09 — 08 — 1992

### அமரர் நீ. வ. நவரெத்தினம்

(N. V. N.)

(தெமட்டகொட முன்னாள் வர்த்தகர்)

நவரெத்தினமெனும் நாமம் பூண்டு
நாளெல்லாம் நற்பணிகளாற்றி
புவனம் போற்றிட வாழ்ந்தீர் - ஐயா!
புதுமை நெறிகள் வகுத்தீர் ஐயா!

வெள்ளை உடை வெள்ளை உள்ளம் - எமை
விரும்பிட வைக்கும் ஐயா!
பிள்ளைகளைப் பேதமின்றிக் காத்தே
பெரும்புகழ் சேர்த்தீர் ஐயா!

காலமெலாம் கண்ணியமாய் வாழ்ந்து
கட்டிய மனைவியிடம் கடமைகளை விட்டு - நல்லை
வேலனின் விழாக் காலமதில்
விண்ணகம் புகுந்தீர் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கௌரி அம்மனை என்றும் வேண்டி நிற்கும்;

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நா. அருளலிங்கம்,
463, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(26713)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மரணங்களை தவிர்ப்போம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமை யகத்தின் உயிர்காப்புப் பிரிவினர் மாணவர்களுக்கு அறிவுறுத்தும் துண்டுப் பிரசுரம் ஒன்றைக் குடாநாடெங்கும் பரவலாக விநியோகித்து வருகின்றனர்.

கண்ணுக்குப் பழக்கமில்லாத புதிய பொருள்களைத் தொடாதீர்! என்ற எச்சரிக்கை வாசகத்துடன் அந்த அறிவுறுத்தல் ஆரம்பமாகிறது.

நாம் சாதாரண காலத்தில் வாழவில்லை. போர்க்காலச் சூழ் நிலையில் வாழ்கிறோம். யுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற இந்த மூன்றாண்டுகளில் மட்டும் சாதாரண காலத்தில் கண்ணுக்குப் பழக்கமில்லாத புதிய பொருள்கள் எங்கள் பிரதேசத்திற்கு வரவில்லை.

இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த 1987 — 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் அதற்கு முன்னர் 1985 ஆம் ஆண்டிலிருந்தும் ஷெல்கள் மற்றும் வெடிக்கும் பொருள்கள் எங்கள் மண்ணுக்கு அறிமுகமாகின. விமானக்குண்டு வீச்சு ஆரம்பித்த 1990க்குப் பின்னர் வெடிகாத குண்டுகள், வெடித்த குண்டுகள் என்று குண்டுகளும் எங்கள் மண்ணில் விழுந்தன.

ஷெல்கள், குண்டுகள், கிரனேட்டுகள், நிலக்கண்ணி வெடிகள், மிதிவெடிகள் என்று முன்னர் பழக்கமில்லாத, நேரில் பார்த்தறியாத, புத்தகங்கள், பத்திரிகைகளில் வெறும் படங்களாகப் பார்த்த உயிருக்கு ஆபத்தான பல பொருள்கள் இப்போது எங்கள் மண்ணில் புகுந்து கொண்டன. எதிரியால் நாளாந்தம் எமது மண் மீதும் மக்கள் மீதும் ஏவப்பட்டு வருகின்றன; புதைக்கப்பட்டு வருகின்றன.

வெடிக்காத நிலையில் உள்ள ஷெல்கள், விமானக் குண்டுகள், கிரனேட்டுகள், மிதிவெடிகள், நிலக்கண்ணிகள் மற்றும் வெடிப் பொருள்கள் தாராளமாகக் மண்ணுக்குள்ளும், மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளிலும் மறைந்து கிடக்கும் சாத்தியம் நிறைய உண்டு.

எனவே இவை குறித்து மாணவர்கள், சிறுபிள்ளைகள் மட்டுமன்றி பெரியவர்களும் எச்சரிக்கையுடனும் கவனமாகவும் இருக்க வேண்டும். கண்ணுக்குப் பழக்கமில்லாத புதிய பொருள்களைக் கண்டபடி கையாளுவது, பரீட்சித்துப் பார்ப்பது என்பன உயிராபத்தைத் தரும் என்று உணர வேண்டும்.

ஆபத்தான வெடிப்பொருள்களுடன் விளையாடியவர்கள், பரீட்சித்துப் பார்த்தவர்கள் தெரியாத தனமாக தொட்டவர்கள் அல்லது கையாண்டவர்கள் பலர் உயிர் நீத்த சம்பவங்கள் இது வரை பலவும் நடந்திருக்கின்றன. குறிப்பாக சிறுவர்கள், மாணவர்கள் தமது வயதுக்குரிய புதியனவற்றை அறியும் ஆவலுடனும், பயமறியாத் தன்மையுடனும் பழக்கமில்லாத பொருள்களைப் பரீட்சித்துப் பார்த்த போதும், ஆபத்தை உணராது விளையாடிய போதும் உயர்நீத்திருக்கிறார்கள். விளையாட்டு வினையான சம்பவங்கள் பல ஏற்கனவே நிகழ்ந்துவிட்டன.

ஆகையால்—

இந்த ஆபத்தை சிறுவர்களுக்கும், மாணவர்களுக்கும் உரிய முறையில் உணர்த்த வேண்டியது அவசியம். இல்லையேல் எதிரியின் அட்டூழியத்தால் இறக்கும் மக்கள் எண்ணிக்கையுடன், வேண்டாத, அவச்சாவுகளும் பெருகிவிடும்.

இவற்றைத் தவிர்க்கவும், தடுக்கவும் பெற்றோர், ஆசிரியர் சமூகத் தொண்டர்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் சமூகசேவை நிறுவனங்களின் பணி தனித்தனியாகவும், கூட்டாகவும் தேவை.

---

ஜெயலலிதாவை நீக்கக்கோரும் மனுக்கள்:

# தேர்தல் ஆணையாளர் விசாரணைக்கு சென்னை உயர்நீதிமன்றம் தடை

சென்னை, ஜூலை 30

முதலமைச்சர் ஜெயலலிதாவை சட்டசபை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கக் கோரி சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து மனுக்கள் மீது தேர்தல் ஆணையாளர் விசாரணை நடத்தக்கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியும் மற்றும் நான்கு பேரும் சமர்ப்பித்துள்ள மனுக்களுக்கு எதிராக முதலமைச்சர் ஜெயலலிதாவினால் தாக்கல் செய்யப்பட்ட 5 ரிட்மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்வது என்றும் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

தகுதி நீக்கஞ் செய்யக் கோரும் மனுக்கள் தொடர்பாக முதலமைச்சரின் விளக்கத்தை மட்டும் தேர்தல் ஆணையாளர் கோரலாம் என்றும் அம்மனுக்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்குத் தேவையான சாட்சியங்களை தேர்தல் ஆணையாளர் சேகரிக்கக்கூடாது என்றும் நீதிபதி திரு. கனகராஜ மேலும் உத்தரவிட்டார்.

(இ-எ)

## வைரமுத்து நினைவு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 30

காங்கேசன்துறை வசந்த கானசபா எடுக்கும் நடிகமணி வி. வி. வைரமுத்துவின் 4ஆவது நினைவு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

விழாவில் திரு. ஆ. கனகசபாபதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்; கலைமாமணி வே. மார்க்கண்டு நாடக திலகம் கே. வி. நற்குணம் ஆகிய இரு கலைஞர்களும் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவர்.

திரு. வி. ரி. செல்வராஜாவின் நெறியாள்கையிலும் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளையின் தயாரிப்பிலுமான "மயான காண்டம்" நாடகமும் இவ்விழாவில் இடம்பெறும். (க)

## பாடசாலைகளில்

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் முதலாவது இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளி பிற்பகல் 1-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் வித்தியாலய அதிபர் திரு. மு. செல்லையா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சமூக சேவைகள் திணைக்களப் பிரதி ஆணையாளர் திருமதி க. சிவசிதம்பரமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கோட்ட பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம், யாழ் இந்து அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அருணகிரிராசா ஆகியோரும், கௌரவ விருந்தினராக யாழ். வட்ட வைப் பொறுப்பாளர் திரு. குட்டியும் கலந்து கொள்வர். (த)

o o o

தென்மராட்சி, ஜூலை 30

பளை மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் பொ. புண்ணியசீலன் தலைமையில் நடைபெறும்.

(இ-117)

## ஆலயங்களில்

மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்தின் திருநாள் கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறுகின்றது. எதிர்வரும் ஆகஸ்ட் 1ஆம் திகதி காலை 7மணிக்கு பூசையும், சுரூபப் பவனியும், இரவு கலை நிகழ்ச்சியும் இடம் பெறும். (இ)

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணிமண்டப முன்றிலில் தெய்வீக இசை அரங்கில் திரு. கே. இராமநாதன் இன்னிசைக் கச்சேரி மாலை 6 மணி முதல்.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோவிலில் 5-15 — 6-15 "ஏகலைவன்" எனும் பொருளில் கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குரு மூர்த்தி மண்டபத்தில் மாலை 5-30 — 6-30 பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி "குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம்" எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

பிற்பகல் 2-00 — 3-00 மணிக்கு திரு. மூ. ஆறுமுகம் 'தேவநாயகனுக்கு ஒரு தெய்வயானை' எனும் பொருளில் சமயச் சொற்பொழிவு.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00 — 4-30 மணிக்கு கந்தபுராண படனம்.

(க-111-126)

## நுண்ணாய்வு பரிசோதகர் தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 30

அஞ்சல் அலுவலக நுண்ணாய்வுப் பரிசோதகர்கள் தெரிவுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் திணைக்கள மட்டத்திலுள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் தகுதியுடைய பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களை உடனடியாக பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்துக்கு (வடமாகாணம்) அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் 1987ஆம் ஆண்டு அஞ்சல் அலுவலக சுற்றறிக்கை 17 (24-4-87) இல் கொடுக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம் சேதுகாவலர் அறிவித்துள்ளார். (இ-162)

## இன்று

கைதடி நாவற்குழி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தையல் பயிற்சி வகுப்பு இன்று வெள்ளி காலை 9.00 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலாளர் பு. சுந்தரம்பிள்ளை அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.

[த-117]

o o o

கொழும்புத்துறை, ஜூலை 30

சித்தன்கேணி ஜனசக்தி சனசமூக நிலைய வருடாந்த விளையாட்டுப் போட்டியும், மது விலக்கல் கருத்தரங்கு நிகழ்ச்சிகளும் இன்று வெள்ளிக்கிழமை திரு. பொ. வடிவேலு தலைமையில் நடைபெறும். (இ-30)

# செய்திக் கொத்து

### தெரு நாடகம்

தென்மராட்சி, ஜூலை 30

கடந்த 1991ஆம் ஆண்டில் ஆனையிறவில் வீரமரணமடைந்த மாவீரர்களின் நினைவாக கொடிகாமத்தில் அமைக்கப்பட்ட நினைவாலயத் திறப்பு விழாவுக்கு அழைப்பு விடும் "தெரு நாடகம்" தென்மராட்சி கலை பண்பாட்டுப் பிரிவினரால் தென்மராட்சிப் பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது.

(க-117)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா சமீபத்தில் நடைபெற்றது.

யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பாடசாலை அதிபர் ச. சோமலிங்கம் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது. (இ)

### பாடசாலையின் சாதனை

1993 ஜூன் மாதம் யாழ். கோட்ட மட்டத்தில் நடைபெற்ற தமிழ் தினம் 'அ' பாடத்திட்டத்திற்கான போட்டியில் சமூக நாடகத்திற்கான முதலாம் இடத்தை யாழ். புனித றோக் வித்தியாலய மாணவர்கள் நடித்த "தடைக்கற்கள்" என்ற நாடகம் பெற்றுள்ளது. [க]

### நூல் அன்பளிப்பு

வடமராட்சி, ஜூலை 30

சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு நிகழ்வாக பளை... அரசினர் பயிற்சிக் கலாசாலையில் ஸ்ரீஇராமகிருஷ்ண விவேகானந்த புத்தகக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடத்திய இந்நிகழ்ச்சியினை ஒட்டி சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் முதல் பத்துத் தொகுதிகள் சுவாமி சித்ரூபானந்தாவினால் கலாசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.

[க-173]

### கௌரவம்

வடமராட்சி, ஜூலை 30

பருத்தித்துறை மாதனையைச் சேர்ந்த பிரபல நாட்டுக் கூத்துக் கலைஞர் கலைச்சுடர் ந. சிவசுப்பிரமணியத்துக்கு இன்று வெள்ளிக்கிழமை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படும்.

(க-173)

### பதவியேற்பு

தென்மராட்சி, ஜூலை 30

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகளின் பதவியேற்ற நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி சாவகச்சேரி யாழ். வீதியில் இடம்பெற்றது. (க-117)

### 4 பேரை கடித்த விசர்நாய்

வட்டு கிழக்கு பிளவத்தையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விசர்நாய் ஒன்று நான்கு பேரை கடித்துக் குதறியது.

தந்தை, மகன் மற்றும் இரு பெண்களையும், அந்த நாய் கடித்துக் காயப்படுத்தியது. மற்றைய நாய்கள், மாடுகளையும் அந்த நாய் விட்டு வைக்கவில்லை.

பின்னர் அந்த விசர்நாய் இறந்து... [illegible]

## 'தமிழீழ நோக்கு' 3ஆவது இதழ் வெளிவருகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 30

"தமிழீழ நோக்கு" சஞ்சிகையின் 3ஆவது இதழ் இன்று வெள்ளிக்கிழமை வெளிவருகிறது. யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் கட்டுரைகளையும் மாணவர் பகுதியையும் உள்ளடக்கியதாக இந்த இதழ் அமைந்திருக்கிறது. (க)

## தற்காலிக ப. நோ. கூ. கிளைகள்

அரியாலை, ஜூலை 30

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவத்தை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் மூன்று தற்காலிக சங்கக் கிளைகளை அமைத்துள்ளது.

சங்க கிளைகளில் நியாய விலையில் மக்களுக்கு உணவுப் பொருள்கள், மரக்கறி வகைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சங்க கிளைகளில் ஏராளமான மக்கள் நின்று பொருள்களை வாங்கிச் செல்வதை அவதானிக்க முடிந்தது.

(த-17)

---

உ

## நல்லருள் பொழிவாய்!

ஆடும் பரிமீதி லேறி வந்து நீ
கூடு மடியார் குறை நீக்கி - அருள்
நாடு மடியார் நலம் நோக்காய் வந்து
நல்லருள் பொழிவாய் நல்லூரானே.

ஆறு முகமும் அணி வேலுடனும் வந்து
நீறு பட்ச் செய்வாய் துயர் — யாவும்
வீறு கொண்டெழுந்து நாடு கேட்போர்க்கு
நல்லருள் பொழிவாய் நல்லூரானே.

— சி. சபாநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் இருவர் விடுவிக்கப்பட்டனர்

வடமாராட்சி, ஜூலை 30

கடந்த 15 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் இருவர் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஊடாக விடுதலை செய்யப்பட்டனர்.

குமணை கப்பல் மூலம் இவர்கள் இருவரும் நேற்று பருத்தித்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தற்போது பருத்தித்துறை முனையில் வசிக்கும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வேலாயுதம் சிவம் (23 வயது) கற்கோவளத்தில் வசிக்கும் இளவாலை மாரீசன்கூடலைச் சேர்ந்த சவரிமுத்து ஜேம்ஸ் இராசநாயகம் (44 வயது) ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

மேலும் கடந்த 23 ஆம் திகதி காரைநகர் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் படையினரிடம் சிக்கிய மற்றும் இரு மீனவர்கள் பலாலியில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனைக்கோட்டை சாவக்காடு பகுதியைச் சேர்ந்த இராசன், அரியம் ஆகியோரே அந்த இருவரும் ஆவர்.

(இ-9-173)

# பருத்தித்துறை கடல் பகுதியில் கடற்படையினர் அட்டகாசம்

## மீனவர்மீது தாக்குதல்; படகு இயந்திரம் பறிமுதல்

பருத்தித்துறை சக்கோட்டைக் கடற்பகுதியில் நேற்றும், நேற்று முன்தினமும் கடற்றொழிலுக்கு சென்றவர்களில் நால்வர் கடற்படையினரால் அடித்துத் தாக்கப்பட்டனர்.

ஒரு படகு இயந்திரமும் பிடித்த மீன்களும் கடற்படையினரால் பறிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் சக்கோட்டையைச் சேர்ந்த எட்வேட் அன்ரன் உதயகுமார் (வயது 23) சந்தியாப்பிள்ளை இருதயராசா (வயது 16) ஆகிய இருவரும் கொட்டன் தடியாலும், கம்பாயக் கிறாலும் அடித்துத் தாக்கப்பட்டனர். அவர்களது படகு இயந்திரமும் படையினரால் கழற்றி செல்லப்பட்டது அவர்களது மீனைப் பறித்து படையினர் கடலில் வீசினர்.

நேற்றைய சம்பவத்தில் வலித்தூண்டலில் இருந்து இடம்பெயர்ந்து சக்கோட்டையில் வசிக்கும் மாசிலாமணி ஆனந்தராசா (வயது 23) மாரிசன்கூடலில் இருந்து இடம்பெயர்ந்து சக்கோட்டையில் வசிக்கும் ஜோசப் பிள்ளை ஜெயசிங்கம் (வயது 19) ஆகிய இருவரும் படகு கம்பாய தடியால் அடித்து தாக்கப்பட்டனர்.

கடலில் மீண்டும் சந்திக்க நேர்ந்தால் சுட்டுத்தள்ளி விடுவதாக படையினர் இந்த இருவரையும் அச்சுறுத்தியதுடன் அவர்களது படகில் இருந்த மீனையும் எடுத்துச் சென்றனர்.

(இ-173-15)

# மாதகலில் சிக்கியிருந்த 21 பேர் யாழ். வந்தனர்

## மூவர் வயோதிபர்கள்

இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் சிக்கியிருந்த 21 பேர் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் பருத்தித்துறையை வந்தடைந்தனர்.

விடுவிக்கப்பட்டவர்கள் மாதகல் கிழக்கு, மேற்கு பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இவர்களை ஏற்றிக்கொண்டு வழமையை விட தாமதமாக 'குமணை' கப்பல் நேற்று நண்பகல் 12.10 மணியளவில் பருத்தித்துறையை வந்தடைந்தது. இவர்களில் [illegible] ஒருவரும், மூன்று வயோதிபர்களும் அடங்கியிருந்தனர்.

வயோதிபர்கள் பெயர் விவரம் வருமாறு:-

ஞானப்பு துரை (74 வயது) இளவாலை, சிவலோகன் வன்னித்தம்பி (94 வயது) மாதகல், சின்னத்தம்பி கந்தையா (85 வயது) மாதகல்.

## நால்வர் தப்பி வந்தனர்

நேற்றுக் அதிகாலை இளாலிக் கடலில் நடந்த தாக்குதலில் இருந்து தப்பிய நால்வர் நண்பகலில் இளாலிக் கரையைச் சேர்ந்தனர்.

இதேவேளை நடுக்கடலில் தத்தளித்த இரண்டாவது (கட்டி இழுக்கப்பட்ட) படகு படையினரால் இழுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

# பெற்றோல் பந்தம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பந்தமாகச் சுருட்டி பெற்றோலை நனைத்து திமூட்டி எமது படகிற்குள் எறிந்தனர்.

சில நிமிட நேரத்தில் படையினர் சற்றடி ஓய்ந்தது. அவர்கள் எமது படகை விட்டு தூரத்தே சென்றுகொண்டிருந்தனர். அப்போது எங்கள் படகில் வந்த பயணிகளில் ஒருவர் துணிச்சலுடன் பெற்றோல் பந்தத்தை எடுத்து கடலில் வீசினார்.

எனினும் எமது படகு சிறிது எரிந்ததால் தண்ணீர் உட்புகுந்திருந்தது. அது மூழ்குவதற்கு முன்னர் கடற்புலிகள் வந்து எம்மைத் தமது படகில் ஏற்றினர்.

இவ்வாறு கிளாலிக் கடல் கோரச் சம்பவத்தில் காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள உரும்பராய் வடக்கை வதிவிடமாகக் கொண்ட கதிர்காமநாதர் ஜெயந்தி (31 வயது) தெரிவித்தார்.

(இவரும், திருமதி மகாலட்சுமி பயணம் செய்த படகிலேயே பயணம் செய்தார்.)

ஜெயந்தி சம்பவம் குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர், ஆலங்கேணியிலிருந்து நாம் அதிகாலை சுமார் 2.45 மணியளவில் படகில் புறப்பட்டோம். எமது படகுடன் இன்னொரு படகும் தொடுக்கப்பட்டிருந்தது.

### கடைசிப் படகு

எங்கள் படகுக்கு முன்னால் சுமார் 25 படகுகள் கிளாலி நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. எங்கள் படகே கடைசியாகப் புறப்பட்டது. சுமார் 4 மணியளவில் அது நடுக்கடலை அண்மித்ததும் இயந்திரம் பழுதடைந்தது.

படகோட்டிகள் இயந்திரத்தைப் பழுது பார்த்துக்கொண்டிருந்த போது முன்னுக்குச் சென்ற படகுகள் எமது கண்ணுக்குத் தெரியாத தூரத்துக்குச் சென்றுவிட்டன. எமது படகும், தொடுக்கப்பட்ட படகுமே நடுக்கடலில் நின்று தத்தளித்தன.

சுமார் அரை மணித்தியாலம் இயந்திரத்தைத் திருத்திய படகோட்டிகள், நடுக்கடலில் நிற்கவேண்டாம் என்று நாம் ஏசியதும் பாயைக் கட்டி படகை ஓட்டினர்.

கடற்படையினரின் படகுகள் எமது படகைச் சுற்றி வளைத்து சுட்டபோது, கிரனேட்டுகளையும் படகிற்குள் போட்டனர்.

எமது படகில் இருந்தவர்களில் சிலர் கடலில் பாய்ந்தனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது.

படையினரின் துப்பாக்கி வேட்டுப் பட்டுப் பலரும் காயமுற்றனர். படகிற்குள் குதித்தும் அவர்கள் சுட்டனர். துப்பாக்கி முனைகளால் குத்தினர்.

எங்களோடு பயணம் செய்தவர்களில் ஒரிருவரைத் தவிர அனேகர் இறந்தும் காயமுற்றும் கிடந்தனர்.

படகு உடைந்து தண்ணீர் ஊறியபோது அது இரத்த வெள்ளமாகக் கோரமாகக் காணப்பட்டது. அதனைப் பார்க்க முடியாமல் நான் மயக்கமுற்றேன் — இவ்வாறு அவர் கூறினார்.

(அ-15)

# கிளாலிக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெறியாட்டத்துக்கு இலக்காகியதாகத் தெரிய வந்துள்ளது.

கடற்படைப் படகுகளில் பயணிகளின் படகை நெருங்கி வந்த படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், கிரனேட் வீசியும் பயணிகள் மீது தாக்குதலை நடத்தினர்.

முப்பதுக்கும் மேற்பட்ட பயணிகள் வரை படையினரின் தாக்குதலுக்கு இலக்கானதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

எனினும்—

தாக்குதலில் உயிரிழந்த எட்டுப் பேரின் சடலங்களுடன் மற்றும் காயமுற்ற அறுவரே நேற்றிரவு வரை மீட்டு எடுக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

படையினரின் தாக்குதலில் மேலும் பலர் உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்ட போதிலும்—

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை அதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட எட்டுச் சடலங்களில் மூன்று ஆண்களினதும் இரு பெண்களினதும் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

(உ-117-3-15-9)

# நாம் பயணிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிலிருந்தவர்கள் சிங்களத்தில் பேசியது கேட்டது.

எமது படகை நெருங்கி வந்த கடற்படையினர் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

பயணிகளில் பலரும் ஐயோ சுடாதீர்கள், ஐயோ சுடாதீர்கள்! என்று கூக்குரல் போட்டனர். ஆனால் கடற்படையினர் சுமார் 15 நிமிடங்களாக இடைவிடாது சரமாரியாகச் சுட்டனர்.

நாங்கள் எல்லோரும் கடவுளை வேண்டியபடி படகிற்குள் படுத்தோம். ஆனால் படையினர் ஒரே தொடர்ச்சியாக சுட்டுக்கொண்டிருந்தனர்.

"நாங்கள் பொதுமக்கள் சுடாதீர்கள்" என்று எனது கணவர் உட்படப் பலரும் தமிழிலும், ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் கத்தினோம்.

வெள்ளைச் சேலையையும் காட்டினோம். படகை நெருங்கி வந்த படையினரைக் கண்டதும் எனது கணவர் எழுந்து நாங்கள் பயணிகள் எங்களைச் சுடாதீர்கள் என்று கூறினார்.

அப்போது கடற்படையினர் எனது கணவரின் வலதுபக்கத் தோள் மூட்டில் துப்பாக்கியை வைத்துச் சுட்டனர். அவரது தோள் மூட்டுப் பிரிந்து அப்படியே எனக்கு அருகில் சாய்ந்து விழுந்தார். துடிதுடித்து மரணமானார்.

இவ்வாறு தெரிவித்தார் நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த திருமதி மகாலட்சுமி சபாநாதன் (53 வயது).

கிளாலிக் கடலில் படையினர் நடத்திய தாக்குதலில் காயமுற்று சூட்டுக் காயங்களுடன் இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### நடுக்கடலில் நடந்தது

திருமதி மகாலட்சுமி சம்பவம் குறித்து மேலும் தெரிவித்ததாவது!

எங்கள் படகுடன் இன்னொரு படகும் சேர்த்துக் கட்டி வரப்பட்டது. அதிலும் பல பயணிகள் பயணம் செய்தனர். எங்கள் படகு நடுக்கடலை அண்மித்தபோது அதிகாலை சுமார் நான்கு மணியாக இருக்கலாம்.

கடற்படையினர் எமது படகை நெருங்கி வந்தபோதே அதனைத் திருத்திக்கொண்டிருந்த படகோட்டி கடலில் பாய்ந்து கொண்டார்.

எமது படகில் சுமார் இருபது பேர் பிரயாணம் செய்தோம். பின்னால் கட்டிவரப்பட்ட படகில் எத்தனை பேர் பயணம் செய்தனர் என்பது எனக்குச் சரியாகத் தெரியாது.

கடற்படையினர் தொடர்ச்சியாகச் சரமாரியாகச் சுட்டதால் நாங்கள் படுத்திருந்த போதிலும் சூட்டுக்கு இலக்கானோம். எனது தோளில் துப்பாக்கி வேட்டுப்பட்டது.

கடற்படையினர் எமது படகு நின்ற இடத்திலிருந்து சென்றபோது, பெற்றோல் பந்தம் ஒன்றை படகிற்குள் வீசிவிட்டுச் சென்றனர்.

### பெற்றோல் பந்தம்

ஆனால் எம்முடன் கூட வந்த பயணி ஒருவர் பந்தத்தை துணிச்சலுடன் எடுத்துக் கடலில் வீசியதால் எமது படகு எரிந்து போகாமல் தப்பிக்கொண்டது.

படையினர் சென்ற பின்னர் பார்த்தபோது பலர் இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்தனர். ஒரே முனகல் சத்தம் சிலர் எழும்ப முடியாத நிலையில் கிடந்தனர்.

பொழுது விடியும்போது எங்கள் படகும், இழுத்துவரப்பட்ட படகும் தத்தளித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

தூரத்தில் இன்னொரு படகு வந்து கொண்டிருந்தது. படையினரின் படகுதான் என நினைத்து வெள்ளைச் சேலையை உயர்த்திக் காட்டினேன்.

அருகில் வந்ததும் அவர்கள் கடற்புலிகள் என அறியமுடிந்தது. அவர்கள் எங்களைத் தமது படகில் ஏற்றிக்கொண்டு வந்து இளாலிக் கரை சேர்ந்தனர். அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டோம்— இவ்வாறு திருமதி மகாலட்சுமி கூறினார்.

இவரது கணவர் சபாநாதனின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து அடையாளம் காணப்பட்டது.

(அ-17-3 15)

# இராணுவத்துக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் கட்டைக்காட்டில் கைப்பற்றப்பட்டதை விட அதிகம் என்று நம்பப்படுகிறது.

இப்படி அந்த இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# உண்ணாவிரதம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் தெரிவித்தனர்.

தாம் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கும் முன்னர் இதுகுறித்து, ஸ்ரீலங்கா ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவி சிறீமாவோ பண்டாரநாயக்கா, சந்திரிக்கா விஜயகுமாரணதுங்க, பிரிகேடியர் வீரதுங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வோல்டர்பெர்னாண்டோ, மாதும்பாகம அஸ்ஸாஜி தேரர். ஆயர் கென்னத் பெர்னாண்டோ மற்றும் சில அமைச்சர்கள், கூட்டுப் படைத் தலைமையக தளபதி, இராணுவத்தளபதி, பொலீஸ் மா அதிபர், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதி ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பியதாகவும், ஆனால் அவர்களிடமிருந்து தகுந்த பதில் எதுவும் வரவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே இன்று கொழும்பு செல்லும் யாழ். அரச அதிபரிடம் தமது உண்ணாவிரதம் சம்பந்தமான கடிதமொன்றை சிங்கள யுத்தக் கைதிகள் கையளிக்க உள்ளனர்.

(இ-162)

# ஐந்து சடலங்கள்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ யோசப் யேசுராஜா யேசுநாயகம் (வயது 18)—மண்டைதீவைச் சேர்ந்தவர் இடம்பெயர்ந்து மடுவில் வசித்து வந்தவர்.

★ ஏரம்பமூர்த்தி அசோகன் (வயது 34) — பன்னாலையைச் சேர்ந்தவர். இடம்பெயர்ந்து தாவடியில் வசித்து வந்தவர்.

★ கதிரமலை ஜெயந்தி (வயது 25) திருகோணமலையைச் சேர்ந்தவர். இடம்பெயர்ந்து அச்சுவேலி வடக்கில் வசித்து வந்தவர். இவரின் தாயாரும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

★ குப்புசாமி செல்லமுத்து (பெண்மணி — 45 வயது) கனகராஜன் குளத்தைச் சேர்ந்தவர்.

மேலும் மூன்று பெண்களின் சடலங்கள் அடையாளம் காணப்படுவதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

மரண அறிவித்தல்கள் 2ஆம் பக்கத்தில்


## முக்கிய அறிவித்தல்

இடை நிறுத்தப்பட்டிருந்த தேர்த்திருப்பணி 30 07-1993 வெள்ளிக்கிழமையிலிருந்து நடைபெறுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப் பெற்றுள்ளன. இப்பணி செவ்வனே நிறைவேற அடியார்கள், ஆதரவாளர்கள் தங்களது ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தேர்த்திருப்பணிச் சபை,
ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
திருநெல்வேலி.

(86726)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 30-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org